அசல் வழக்கு :28/2017
நாள் : 10.02.2026
பி.வா.சா. : 1
பெயர் : மாலதி

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

வாதி வழக்கு தொடரும்போது என் மகனுக்கு என்னை பாதுகாவலராக சேர்த்து தான் வழக்கு தொடர்ந்தார் என்றால் சரிதான். தற்போது அவருக்கு உரிய வயது கடந்துவிட்டதால் இளவர் நிலையை நீக்கி அவரே பிரதிவாதியாக ஆக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அதனடிப்படையில் வழக்குரையில் திருத்தப்பட்டது என்றால் சரிதான். எதிர்வழக்குரை இந்த வழக்கில் என் மகன் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். கிரய உடன்படிக்கையில் ஆவண எழுத்தராக ஒரு வழக்கறிஞர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. கிரய தொகையாக 10 லட்சம் ரூபாய் வாங்கி ரூபாயை ஐந்து லட்சம் ரொக்கமாகவும் ஐந்து லட்சம் காசோலையாகவும் வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. நான் வாங்கிய காசோலை என் வங்கி கணக்கு மூலம் பணமாக பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சி நான் காசோலையே வாங்கவில்லை என்கிறார். நாகப்பட்டிணம் மாவட்டம் நீதிமன்றத்தில் GWOP.No. 12/2016 என்ற வழக்கு தாக்கல் செய்து உத்தரவு பெறப்பட்டு அதனடிப்படையில் கிரய உடன்படிக்கை செய்யப்பட்டது என்றாலும் ஆனால் தற்போது எனக்கு எதுவும் தெரியாது என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கில் வழக்கு நடத்துகிறேன் என்றால் சரியல்ல. வாதிதான் என்னை ஏமாற்றுகிறார்.